மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, இந்த நவ்லாக் தோட்டம் என்று இருக்கின்ற கிராமம் ஆற்காடு நவாபுக்குச் சொந்தமாக இருந்த நிலங்கள். அது 1861-ஆம் வருடம் கிர்ட்ஹார்ட்தாஸ் கோவிந்த்தாஸ் என்பவரால் ஏலத்திலே எடுக்கப்பட்டது. மொத்தம் 1605 ஏக்கர் உள்ள நிலம் அது. அப்பொழுது அங்கு குடியானவர்கள் இருந்து வந்தார்கள். இதை ரயத்து வாரியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கைகள் பல காலத்திலே கொண்டு வரப்பட்டது. அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி முடிவு எடுத்த பிறகு அவர்களுக்கு என்ன குறைகள் இருக்கின்றன, என்ன பாதுகாப்பு அளிக்க முடியும் என்பதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

மு.ப 10-00 **Thiru K. VINAYAKAM**: Sir, it is a fact that Thiru Giridhar Das has taken it in auction but still if it is converted into a ryotwari village, pattas, will have to be granted to those tenants or farmers who are actually living on the land. Also, recently there was dispute between the auctioner who is an absentee landlord and the peasants living on the land and so, will the Government take steps to rectify this kind of anomaly and see that pattas are granted in favour of the tenants living on the land or if necessary bring forward a new legislation to cover this kind of village in the entire State ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: அதைத்தான் நான் சொன்னேன். இந்த மாநிலத்தில் இம்மாதிரியான எல்லா இடங்களிலும் உள்ள நிலங்களைச் சேர்த்து, இதுபற்றிய ஒரு சட்டம் கொண்டு வரலாம் என்று தான் யோசிக்கப்பட்டு வருகிறது. திரு. கிர்தார்தாஸ் என்பவர் 1861-ம் வருஷத்தில் வாங்கினாரோ, எப்பொழுது வாங்கினாரோ, அவருடைய சந்ததியார்கள் தங்களுக்குத்தான் சொந்தம் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். அவர்களுடைய நிலத்திற்கான உரிமை முன்சீப் கோர்ட்டு வழக்கில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் முறையாக்கப்படும்பொழுது, அங்கு இருக்கிற சாகுபடியாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க சாத்தியக்கூறான முயற்சிகளை அரசாங்கம் எடுக்கும்.

திரு. எஸ். முருகையன்: இதற்கு ரயத்துவாரி பட்டா கொடுப்பதற்கு காலதாமதமானாலும், அங்குள்ள விவசாயிகள் நீண்ட காலமாக நிலத்தை அனுபவித்துக்கொண்டு வருவதால், அவர்களிடம் இன்டெம்னிடி பாண்டு வாங்கிக்கொண்டு, பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதற்கு அரசாங்கம் தனியாக ஒரு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

கவன ஈர்ப்பு அறிவிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சௌந்தரபாண்டியன் இருப்பிடத்தில் இல்லை என்ற காரணத்தினால், அவர்களுடைய கவன ஈர்ப்பு அறிவிக்கை பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.